IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

**CASE NO: OS.345/2023**

DEPOSITION OF WITNESS: **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | அண்ணாமலை | | : | |
| Father's/Husband's Name<br>தந்தை/கணவர் பெயர் | : | சித்தாத்தூரான் | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | இந்திரவனம் | | : | |
| Taluk/தாலுக்கா | : | சேத்துப்பட்டு | Age/வயது | : | 45 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 11th day of Sep. 2025.

**முதல் விசாரணை**

நான் இந்திரவனம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. வாதிக்கு கோதண்டராமன் மற்றும் அவரது குமாரர் 3ம் பிரதிவாதி ஜவஹர் எழுதிக்கொடுத்த 26.05.2016 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 18.04.2000 தேதியிட்ட கோதண்டராமனுக்கு வழக்கு சொத்தை அரசாங்கத்தால் ஒப்படைவு செய்யப்பட்டதற்கான ஆவணம் அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. 05.04.2018 தேதியிட்ட கோதண்டராமனின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 17.12.2022 தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ. 5** ஆகும்.

6. 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ. 6** ஆகும்.

7. 3ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7** ஆகும்.

8. 4ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ. 8** ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.09.11 17:50:34 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்